பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 01 2025 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தேசிய விளையாட்டு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருது குகேஷ், ஹர்மன் பிரீத் சிங், பிரவீன்குமார் மற்றும் மனுபாக்கருக்கு வழங்கப்படுகிறது.

2. புதிதாக 17 கோடிக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் கடந்த பத்தாண்டுகளில் உருவாக்கித்தரப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. தமிழக அரசின் **"C"** பிரிவு **"D"** பிரிவு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

4. அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகளிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது என்று மாநில அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

5. மாலத்தீவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டியில் இந்தியா 11-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

**<<<<<<>>>>>**

தேசிய விளையாட்டு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

உயரிய விருதான மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருது, உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கும், ஹாக்கி அணியின் கேப்டன் ஹர்மன் பிரீத் சிங்கிற்கும், பாரா தடகள வீரர் பிரவீன்குமாருக்கும், ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிச்சுடும் பிரிவில் இரண்டு பதக்கங்களை வென்ற மனுபாக்கருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அர்ஜுனா விருது தமிழகத்தைச் சேர்ந்த துளசிமதி முருகேசன், நித்யஸ்ரீ சுமதிசிவன், மனீஷா ராம்தாஸ் உட்பட 32 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்நாள் சாதனைக்கான அர்ஜுனா விருது தடகள பிரிவில் **Sucha Singh**-க்கும், பாரா நீச்சல் பிரிவில் **Murlikant Rajaram Petkar** –க்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த பயிற்சியாளருக்கான துரோணாச்சாரியார் விருது துப்பாக்கிச்சுடும் பிரிவில் **Deepali Deshpande**-வுக்கும், பாரா துப்பாக்கிச்சுடும் பிரிவில் **Subhash Rana**-வுக்கும், ஹாக்கிப் பிரிவில் **Sandeep Sangwan-**க்கும் வழங்கப்படுகிறது.

இதே பிரிவில் வாழ்நாள் சாதனையாளருக்கான விருது, பேட்மிண்டன் பயிற்சிக்காக முரளிதரனுக்கும், கால்பந்து பயிற்சிக்காக **Armando Agnelo Colaco**-வுக்கும் வழங்கப்படுகிறது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கடந்த ஆண்டிற்கான இந்த விருதுகளை புதுதில்லியில் வரும் 17–ஆம் தேதி நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் வழங்கவுள்ளார்.

இதற்கிடையே, இந்த விருது தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று நாமக்கலில் பயிலும் காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த துளசிமதி முருகேசன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் –* துளசிமதி முருகேசன் *– 19 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், நிதி மற்றும் பங்குச்சந்தை நிபுணர்களுடன் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனையின் ஒருபகுதியாக இந்த கூட்டம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நிதித்துறை செயலர், முதன்மை பொருளாதார ஆலோசகர் உட்பட பலர் இந்த ஆலோசனையில் பங்கேற்றதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின்னர், புதிதாக 17 கோடிக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கித்தரப்பட்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கடந்த ஓராண்டில் மட்டும் 4 கோடியே 60 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் 36 சதவீத வளர்ச்சி காணப்பட்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிப்பொறுப்பில் இருந்த பத்தாண்டுகளில் 2 கோடியே 90 லட்சம் வேலைவாய்ப்புகள்தான் உருவாக்கப்பட்டதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

கார் – சி தில்லி / 11

தமிழக அரசின் **C** பிரிவு **D** பிரிவு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பூதியம், சிறப்பு கால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதிநேர

பணியாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசாக வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களை பொறுத்தவரை இது 500 ரூபாயாக இருக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகளிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*( சவுண்ட் பைட் - அன்பில் மகேஷ் - 25 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

ஜல்லிக்கட்டு போட்டிகளின்போது உள்ளூர் காளைகளுக்கென எந்த முன்னுரிமையும் அளிக்கப்படுவதில்லை என மாநில அமைச்சர் திரு மூர்த்தி கூறியுள்ளார்.

மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவததற்கான பந்தக்கால் நடும் நிகழ்ச்சியில் இன்று பஙகேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பங்கேற்கும் வீரர்கள் மற்றும் காளைகள் ஆன்லைன் வாயிலாக மட்டும்தான் பதிவு செய்யப்படுவதாக தெரிவித்தார்.

அவனியாபுரத்தில் வரும் 14-ஆம் தேதி ஜல்லிக்கட்டு நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>

**'DAP '** உர மானியத்திற்கான சிறப்பு தொகுப்புத்திட்டத்தை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதற்கு நாடு முழுவதும் விவசாயிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை தங்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று வேலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - விவசாயிகள் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்றபின்னர் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் தொடர்பாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மௌனமாக இருப்பது கண்டனத்திற்குரியது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வழங்க வேண்டும் என்று கோரி பாமக மகளிர் அணியினர் மாநிலம் முழுவதும் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற பாமக மகளிர் அணியினரை காவல்துறையினர் கைது செய்தனர்.

இந்த கைது நடவடிக்கைக்கு பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக தமாகா தலைவர் திரு ஜி கே வாசன் கூறியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் காரணமாக, சட்டம் - ஒழுங்கு பிரச்சினை அதிகரித்துள்ளதாக குறை கூறினார்.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதிகேட்டு போராடும் எதிர்க்கட்சிகளை கைது செய்வது ஏற்புடையதல்ல என்றார்.

பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு தூக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் திரு ஜி கே வாசன் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூரில் 13 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உணவு தானிய கிடங்கினை மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் இன்று திறந்துவைத்தார்.

---------------

திருவாரூர் மாவட்டம் எடமேலையூர் ஊராட்சிகளில் தூய்மைப்பணியாளர்களுக்கு பேட்டரி பொருத்தப்பட்ட ஆட்டோ வாகனங்களை மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா இன்று வழங்கினார்.

-------------

நாகை மாவட்டத்தில் பயிர்களை சேதப்படுத்தும் பன்றிகளை அப்புறப்படுத்த வரும் 4-ஆம் தேதிக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திரு ஆகாஷ் கூறியுள்ளார்.

-----------------

கடலூர் மாவட்டத்தில் மாநில அரசின் கனவு இல்ல திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுவரும் வீடுகட்டும் பணிகளை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மாலத்தீவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டியில் இந்தியா 11-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பெங்களுருவில் நடைபெற்ற இப்போட்டியில், **Lhingdeikim** நான்கு கோல் அடித்தார்.

---------

இந்திய கிரிக்கெட் அணியினருக்கு ஆஸ்திரேலிய பிரதமர் திரு **Anthony Albanese** விருந்தளித்தார்.

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிட்டினியில் நாளை தொடங்கவுள்ள நிலையில் இந்த விருந்து வழங்கப்பட்டது.

----------------

மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டி வேலூரில் இன்று தொடங்கியது.

பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 80-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<END>>>>>